# வறுமை, தோல்வி, வியாதி, வேதனை

பல நேரம் … வறுமைக்கும், தோல்விக்கும், வேதனைக்கும், வியாதிக்கும்… தேவ சித்தமில்லை என்று… தவறாக சிலர் தேவனை கை காட்டி விடுகிறோம். தேவன் எதிலும் பாடம் கற்று மீண்டுவர எதிபார்ப்பார். ஆனால். விழுந்த இடத்திலேயே விழுந்து கிடந்து, எழுதின பரிட்சையிலே திரும்ப திரும்ப ஃபெயிலாயிட்டு இருந்துட்டு தேவனை கை காட்டுறவங்களுக்கு… தயவு செய்து சொல்றேன். ஜெபம் போதாது. சர்ச்சும் போதாது




இதைக் கேட்ட உடனே, உங்களுக்கு கோபம் வருமே? ஏங்க. நான் கேக்குறேன்… பசிக்கு மட்டும் தான் உணவு என்றால் 3 நேரமும் இட்லியோ, 3 நேரமும், சோறோ போட்டால் போதுமே. நாம சாப்பிடுவமா? இல்லைல்ல? வகை வகையா தேடுது இல்ல?

உடலை மூட ஆடை தான் முக்கியம் என்றால், ஒரே காட்டன் துணி மட்டும் நெய்து மீட்டர் மீட்டரா அடிச்சு தள்ள வேண்டியது தான… ஒருத்தங்க லைட் வெயிட்டா இருக்கனும்னு சிபான் சேலை வாங்குறாங்க. வெயிலுக்கு வியர்க்காம இதமா இருக்கனும்னு சிலர் காட்டன் shirt வாங்குறாங்க… கல்யாணம் ந்னா பட்டு வாங்குறாங்க.

இங்க வசதி, உணர்வு, அழகு பல மாதிரி உணர்வுகள் முக்கியமா போயிட்டுது இல்லையா?

அது மாதிரி தான். இந்த Technology நிறைந்த உலகில், அறிவு பெருத்த மக்களுக்கு, வெறும் பைபிளும், ஜெபமும் போதாது. விசுவாசம் வேணும்.

**விசுவாசம் போதும் தான்.**



இந்த காலத்து மக்கள் எதையும் அவ்வளவு எளிதாக நம்புவதில்லை. அந்த ஆண்டவரே நேரில் வந்தாலும் நம்மில் அனேகர்... நம்ப மாட்டாங்க. **பெரும்பான்மையான மக்களுக்கு விசுவாசமே இல்லை**. ஏன் கூடவே இருந்த தோமாவுக்கு சந்தேகம் வரவில்லையா?

காரணம் **உலக அறிவு பெருத்தவர்கள் பலர் அவிசுவாசி ஆகிவிடுவார்கள்**. அதனால் எப்பொழுதும் எல்லாவற்றுக்கும் கேள்வி கேட்டுக்கொண்டே இருப்பார்கள். அதனால் அவர்களை நம்ப வைப்பது, விசுவாசிக்க வைப்பது மிகவும் கடினமாகி விடுகிறது.

## High Tech Course



அறிவியல் பெருத்து விட்ட இந்தக் காலத்தில் கடவுளோடு, அறிவியலையும் சேர்த்து, **மனநலம், மொழியியல்,** சேர்த்து Training / Counseling கொடுக்கும்போது அவர்களுக்கு புரிவது எளிதாக இருக்கிறது. அவர்கள் விளங்கிக் கொள்வதும் எளிதாக இருக்கிறது. கூட்டமாக **மக்கள் மறுரூபம் ஆக பயிற்சி வகுப்புகளும் தேவைப்படுகிறது**.

அதனால் இந்த காலத்து சபைகளில் bible மட்டும் போதிப்பது போதாது.. உலக அறிவு பெருத்தவர்களுக்கு இந்த மாதிரி **counseling, personality development training,** **நிறைய practical life teachings, stories,**

உதாரணங்கள் மூலம் தான் வாழ்க்கை மேம்பட வைக்க முடியும். தேவனின் அன்பை சாதாரண மக்களுக்கு புரிய வைக்கும் வல்லவர்கள்... விரல் விட்டு எண்ணக்கூடிய அளவே பாஸ்டர்கள் இருக்கிறார்கள்.

தேவனை பற்றிப் பேச பல லட்சம் சபைகள் இருக்கு. அங்கு 100க்கு 100% ஆவிக்கு மட்டுமே இடம் உண்டு. ஆத்துமாவும், சரீரமும் கேட்பாரற்று கிடக்கும். மனதையும், உடலையும் செப்பனிடுவதெப்படி என்று மத்த மதத்தை சேர்ந்தவங்க தான் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். கிறிஸ்தவ மதத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலே தான் இருக்கிறார்கள். ஆண்டவருக்கு, **ஆவி, ஆத்துமா, சரீரம் 3 ஐயும் தான் ஒப்புவிக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் சம அளவு முக்கியத்துவம் கொடுத்து கற்றுக்கொடுப்போம்.**

அதனால்...




ஏங்க. Covid time ல 2 வருஷமா. நான் தான் என் வீட்டு வேலையை செய்தேன். நான் தான் சமையல் செய்தேன். நான் தான் dress stitch பண்ணேன். நான் தான் haircut பண்ணேன். நான் தான் chappal பிஞ்சு போனால் fix பண்ணேன். So என்னால் எல்லாம் செய்ய முடியும் என்பதற்காகவோ, செய்யத் தெரியும் என்பதற்காகவோ, இதையெல்லம் நானே செய்து கொண்டு இருந்தால்...

1. நான் எதற்காக அழைக்கப் பட்டேன் என அழைப்பை மறந்துபோய் வேற வேலையை செய்து கொண்டு இருப்பேன்.
2. Dress stitch, chappal stitch, haircut என அதில் வல்லவர்கள் இருப்பார்கள், ஆக சில நுணுக்கங்களை நாம MISS பண்ணுவோம்.
3. நாம எதற்காக அழைக்கப் பட்டோம் என்பதிலும் நம் கவனம் இருக்கவேண்டும்.
4. ABCD உங்களுக்குத் தெரியும், அப்புறம் schoolக்கு ஏன் அனுப்புறீங்க?

சிலவை சிலர் சொன்னால் மட்டுமே சிறப்பு. சொல்ல வேண்டியவங்க சொன்னால் தான் சிலது எடுபடும்.

**அதனால்... You need Life Changers!!!**